மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
IA.954/2019 in OS. 63/2012

தேதி: 05.01.2021
பெயா்: சுவாமிநாதன் (PW–1)

**குறுக்கு விசாரணை:** 05.01.2021
சாட்சி அனுமதியின்போில் அழைக்கப்பட்டுசத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறாா்.

இந்த மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1ம் வாதி கிருஷ்ணம்மாள் 2017ல் இறந்துவிட்டாா். நான் 2ம்வாதியின் பவா் கஏஜெண்டா். 2ம் வாதி வெளிநாட்டில்வேலை செய்கிறாா். 3ம்வாதி சீத்தா என்பவா் உடல்நிலை சாியில்லாமல் வீட்டில் உள்ளாா். மேற்படி 1ம்வாதி இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் பெறுவதற்கு காலதாமம் ஆகிவிட்டால் மேற்படி 1ம்வாதி இறந்ததை விவரத்தை தொிவிப்பதற்கு நீதிமன்றத்திற்கு காலதாமம் ஆகிவிட்டதால் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது. 1ம்வாதி இறப்பு சான்றிதழ்கேட்டு எப்போது தாக்கல்செய்தீா்கள் என்றால் 2018ல் நான் மனு செய்த ஆறு மாத காலத்தில் கிடைத்தது. ஏன் உடனடியாக இறப்பு சான்றிதலுக்கு பதிவு செய்யவில்லை என்றால்எனக்குஉடல்நிலை சாியில்லை. என்னைதவிர வேற யாரும் அங்கு விவரமானவா்கள் இல்லை. அதனால் காலதாமம் ஆகிவிட்டது. 1ம்வாதி கிருஷ்ணம்மாளுக்கு வாாிசு சான்று வாங்கிவிட்டேனா என்றால் வாங்கிவிட்டேன். இடையில் 2ம்வாதி வெளிநாட்டில் இருந்து இந்தியாவிற்கு வந்திருந்தாா். அற்போது மனு செய்து வாாிசு சான்றிதழ் வாங்கினாா். எனக்கு எப்போது என்று தேதி தொியவில்லை. 2ம்வாதி எப்போது இந்தியா வந்தாா் என்று தேதி தொியுமா என்றால் சாியாக தொியாது. இறந்த 1ம் வாதி கிருஷ்ணம்மாளுக்கு யாா் யாா் வாாிசுகள் என்றால் ராமகிருஷ்ணன், சிவா மற்றும்சீத்தா ஆகியோா்ஆவாா்கள். கிருஷ்ணம்மாளின் வாாிசான சிவா என்பவா் இறந்துவிட்டாா்என்றால் சாிதான். சிவாவின் மனைவி கலா என்றால்சாியல்ல. கலா என்பவாின் கணவா்பெயா் என்ன என்றால் சின்னையன். சிவா கலா வீட்டில் வேலை பாா்த்துக்கொண்டிருந்தாா். சிவாவிற்கும் கலாவிற்கும் பிறந்த குழந்தைதான் 2ம்பிரதிவாதி பாபு என்றால் சாியல்ல. நான் என்ன ஊாில் வசிக்கிறேன் என்றால் கீழபெரும்பள்ளம்

என்ற ஊரில்வசிக்கிறேன். இந்த மனு தாக்கல்செய்தபோது உடல்நிலை சாியில்லை என்று சொல்லீா்கள் என்ன செய்தது என்றால் மஞ்சள்காமாலை நோய். எனக்கு எப்போது மஞ்சள்காமாலை வந்தது என்றால் 2017 கிருஷ்ணம்மாள் இறந்ததற்கு முன்பு மஞ்சள்காமாலை வந்தது. 2019 வருடம் கடைசியில்தான் சாியானது என்றால் சாிதான். 2017 முதல் 2019 வரை வெளியே எங்கு செல்லவில்லை என்றால் சென்றேன் ஆனால்என்னை கைதாங்கலாக பிடித்துக்கொண்டு செம்பனாா்கோவில் சாா்பதிவகத்திற்கு அழைத்துக்கொண்டு செல்வாா்கள். எத்தனை தடவை சென்றேன் என்றால் எனக்கு 2 மற்றும் 3 முறை போய்வந்தேன். மஞ்சள்காமாலைக்கு எங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் பரவையில் எடுத்துக்கொண்டேன். தலைச்சம்காட்டிலும் எடுத்துக்கொண்டேன். எங்கள் ஊாில் இருந்து பரவை எத்தனை கிலோமீட்டா் என்றால் 42 கிலோ மீட்டா் இருக்கும். சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீா்களா என்றால் அபிடவிட்டில் காண்பித்துள்ளேன். இந்த மனுவை சீத்தா போட்டிருக்கலாம்என்றால்அவருக்கும்உடல்நிலை சாியில்லாமல் உள்ளது. நடைஉடை இல்லை. ராமகிருஷ்ணன் இந்தியா வந்தபொழுது இந்த மனுவை தாக்கல் செய்திருக்கலாம் ஆனால் ஏன் தாக்கல் செய்யவில்லை காரணம் ஏதேனும்உண்டா என்றால்காரணம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள இந்த மனுவிற்கான அபிடவிட்டில்மஞ்சள்காமாலையால்தான் மனு தாக்கல் செய்ய காலதாமதம்ஆகிவிட்டது என்று காரணம் கூறவில்லை என்றால் என்ன என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு மஞ்சள்காமாலை என்று சொல்வது பொய் என்றும் அதனால்இந்த மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சாியல்ல.

<u>மறுவிசாரணை:</u> இல்லை.

குறுக்கு விசாரணைதொடர்ச்சி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின்

வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

<u>மறுவிசாரணை:</u> இல்லை.